(ஆ) ஒற்றிவைப்புத் தீர்மானம் மீதான முடிவு குறித்து

DR. H. V. HANDE: On a point of order, Sir; there are a large number of cycle-rickshaws outside about which I have given an adjournment motion. May I know what is the dis-disposal.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று முதலிலே சொல்லுங்கள். அதற்குப் பிறகு செய்திக்குப் போகலாம். அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொடுத்ததாகச் சொன்னீர்கள். இதுவரை என்னிடம் ஒன்றும் வரவில்லை. அட்ஜர்ன்மெண்ட் மோஷன் வராததற்குப் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது கூடாது. இதற்கு விளக்கம் கொடுக்கும் முறை கிடையாது.

DR. H. V. HANDE: This is an emergency. Will you take it has not yet reached you, Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் காலை எட்டரை மணிக்கு வந்து என்னுடைய அறையில் உட்காருகிறேன். ஒன்பது மணி வரையில் அறையிலேயே தானிருந்தேன். உங்களுடைய அட்ஜர்ன் மென்ட் மோஷன் அதுவரை வரவில்லை.

DR H. V. HANDE: I have given it to the Secretary but up the matter with the Secretary as to why it has not yet been given to you?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வேறு விஷயம்.

3. அரசினர் தீர்மானங்கள்

(அ) விதி 41 (3) ஐ தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது மாண்புமிகு அவை முதல்வர் அவர்கள் விதி 41 (3) ஐ தளர்த்த வேண்டுமென்ற தீர்மா னத்தைக் கொண்டு வருவார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு சட்டப் பேரவை விதி 41 (3)-ன் கீழ் ஒரு கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக் கூடாது என்கிற விதியைத் தளர்த்த வேண்டுமென்று முன் மொழி கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

4. கவன ஈர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு திரு. கரு. சிமைச்சாமி அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள். அவர்கள் சபைக்கு வரவில்லை. அடுத்து, புலவர் பொ. பொன்னம்பலம் அவர்கள் நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.